செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

F.No.11-264/2024-25/CICT நாள்: 31.01.2025

# பயிலரங்கம் - 19

## அறிவிப்பும் அழைப்பும்

## தமிழ்ச் செவ்வியல் பதிப்புகளை முன்வைத்துப் பாடவேறுபாடுகளை அடையாளப்படுத்துதலும் பாடநிர்ணயம் செய்தலும்

தமிழ்ச் செவ்வியல் பதிப்புகளைச் செம்பதிப்புக்களாக வெளிக்கொணர்வதை முதன்மை நோக்கமாகக்கொண்டு வருதலில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இதுவரையில் ஒவ்வொரு பழந்தமிழ்ச் செவ்வியல் பதிப்புகளில் பாடவேறுபாடுகளை மட்டும் அடையாளப்படுத்தும் நிலையைக் காணமுடிகின்றன. ஆனால் அப்பாடங்களை நிர்ணயம் செய்யாது வெறுமனே ஏடுகள், பதிப்புகள், உரைமேற்கோள்களில் காணப்பட்ட பாடவேறுபாடுகளை அடிக்குறிப்புகளிலும் உரையினூடேயும் குறிப்பிடுவதைப் காணலாம். பிற்சேர்க்கையில் சிலர் தொகுத்துத் தருவர். இதனைச் சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆறுமுக நாவலர், உ.வே.சாமிநாதையர், சௌரிப்பெருமாள், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ச.வையாபுரிப்பிள்ளை, ரா.இராகவையங்கார், வே.ராஜகோபால் ஐயர், யாழ்ப்பாணம் தி.சதாசிவ ஐயர், ஔவை.துரைசாமிப்பிள்ளை போன்றோர் தங்களது பதிப்புகளில் கையாண்டுள்ளதைக் காணலாம். இவற்றில் ஒரு சில பதிப்பாசிரியர்கள் பாடவேறுபாட்டை நிர்ணயம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டதையும் அறியமுடிகின்றது. ஔவை. துரைசாமிப்பிள்ளை தமது பதிப்புகளில் பாடவேறுபாடுகளைக் குறிப்பிடுவதோடு செய்யுளின் உரையினூடே அதற்கான விளக்கத்தையும் தந்து பதிப்பித்துள்ளார். ஆனால் இத்தகையப் பதிப்புகளில்

இவ்விளக்கம் ஏற்புடையது அல்லது ஏற்கத்தக்கது அன்று எனும் முடிவினை உறுதிசெய்யும் போக்கு பெரிதும் எடுத்துக்கொள்ளாமல் விடுத்தனர்.

இவ்வாறு பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த பழந்தமிழ்ப் பதிப்புகளில் பாடவேறுபாடுகளைப் பட்டியலிடுவதும் அடிக்குறிப்பிடுவதும் இருந்தநிலையில் பாடவேறுபாடுகளை நிர்ணயம் செய்தலில் கவனம் கொள்ளாமல் இருந்ததை அறியமுடிகின்றன. இத்தகைய பதிப்புகளில் பாடத்தை நிர்ணயம் செய்வது என்பது பெரிதாக முன்னிலைப்படுத்தாமல் விடுத்ததையும் காணலாம். தற்கால ஆய்வுலகில் அத்தேவை உருவாகியிருப்பதால் இதுதான் மூலபாடம் என்று நிர்ணயம் செய்வதற்குரிய விளக்கக் காரணிகளின் இன்றியமையாமையை எண்ணிச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இறையனார் களவியல், ஐங்குறுநூறு, கைந்நிலை ஆகிய மூன்று நூல்களுக்கும் பாடநிர்ணயம் செய்து உரிய விளக்கங்களோடு செம்பதிப்பு வெளியிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாக உள்ளது. உதாரணமாக, **ஐங்குறுநூறு – நெய்தல்** செம்பதிப்பிலிருந்து (ப.242) ஒரு பாடவேறுபாட்டைக் காண்போம்.

> அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
> மணங்கமழ் பொழிற்குறி நல்கின ணுணங்கிழைப்
> பொங்கரி பரந்த வுண்க
> ணங்கலிழ் மேனி யசைஇய வெமக்கே.

என்னும் ஐங்குறுநூறு 174ஆவது செய்யுளில் ‘யசைஇய’ என்பதன் பாடவேறுபாடாக ‘யசையிய’ என்னும் பாடம் தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சர்.) சி.வை.தாமோதரம்பிள்ளை மற்றும் ச.பவானந்தம்பிள்ளை, தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்.) வ.உ.சி., ஐங்குறுநூறு உ.வே.சா., ஔவை., பொ.வே.சோ. போன்றோரின் பதிப்புகளின் அடிக்குறிப்பில் பதிவாகியிருக்கின்றது. இப்பாடவேறுபாட்டின் பாடநிர்ணய விளக்கமாக, “ ‘யசைஇய’ என்பது கொள்ளத்தக்கது. ‘அசைஇய’ என்பதற்கு வருந்திய, மெலிவுற்ற என்பது பொருள். ‘அசைவு’ என்பதன் ‘அசை’ என்னும் வினையடி அளபெடுத்து, ‘அசைஇய’ என எச்சமாயிற்று. “இளிவே இழவே அசைவே வறுமையென, விளிவில் கொள்கை அழுகை நான்கே” (தொல்.மெய்ப்.5). ‘யசையிய’ என்னும் பாடம் ‘அசையியல்’ என்பதன் திரிபு. இஃது

அசைதலையுடைய என்பதைப் பொருளாகக் கொண்டது. 'அசைகின்ற இயல்புடைய எமக்கு' என்பது பொருட்சிறப்பின்று" எனத் தரப்பட்டிருப்பதைக் காணலாம்.

எனவே செவ்வியல் இலக்கியங்கள் மட்டுமின்றி பிற்கால இலக்கியங்களையும் ஆய்விற்கு உட்படுத்திச் செம்பதிப்புக்களைக் கொண்டுவரும் காலத்தேவையும் வரலாம் என்கின்ற சிந்தனையின் அடிப்படையிலும் **'தமிழ்ச் செவ்வியல் பதிப்புகளை முன்வைத்துப் பாடவேறுபாடுகளை அடையாளப்படுத்துதலும் பாடநிர்ணயம் செய்தலும்'** எனும் பொருண்மையில் பயிலரங்கத்தினை நடத்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் சுவடியியற்புலம் திட்டமிட்டுள்ளது. ஆய்வு மாணவர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சியளிக்க உள்ளனர். கல்லூரி/பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் பயிலும் முனைவர்ப் பட்ட ஆராய்ச்சியாளர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - 30.
- பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 27.02.2025 முதல் 05.03.2025 வரை.
- பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 - 1.00 மணி & பிற்பகல் 2.00 - 5.00 மணி.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவுசெய்து இணையத்தின்வழி அனுப்பவும்.
- இணையவழி விண்ணப்பம் https://forms.gle/5tq5r4V8Y2x3oQFJ7 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (OR-Code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

- பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **19.02.2025** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **21.02.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். **தாமதம்** மற்றும் **இடைநிற்றல்** இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டாது.

**இயக்குநர்**